(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக இப்படி வீடுகளை கட்டித் தருவதோடு, அவர்களுடைய பொருளாதாரத்தையும் உயர்த்தவேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அந்த வகையில் தாட்கோ மூலமாக கட்டப்பட்ட வீடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் வீடுகளை கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகையை அரசு உத்தரவிட்டு தனியாக தாட்கோ மூலமாக ரூரல் ஹவுசிங் ஸ்கீமை நாம் செயல்படுத்துவதைப் போல அதே அளவிற்கு வீடுகளை அமைத்து அதற்கு உண்டாகக்கூடிய மொத்தத் தொகையான ரூ. 4,000—ல் ரூ. 3,250-ஐ மான்யமாகவும் மீதியிருக்கிற ரூ.750ஐ பயன் பெறுபவர்கள் உழைப்புக்குரிய ஊதியமாகவும் கருதி ரூ 4000-ல் ஒரு வீடு என்ற அளவில் 201 சதுர அடியில் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்தவகையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் இதற்கு முன்பு நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டத்திற்கு செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எல். இளைய பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பது தான் கேள்வி வீடே கட்டவில்லை என்றால் பழுது எப்படி வரும்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூங்கில்பாடி கிராமத்தில் கட்டிக் கொடுத்த வீடுகள் பழுதடைந்துள்ளது என்பதுதான் கேள்வி. நீங்கள் தனிக்கேள்வி போடுங்கள், உட்காருங்கள்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினா தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டப்பட்டு வீடுகள் பழுதடைந்து இருக்கிறபோது, அந்த மக்கள் அவற்றை புதுப்பித்துக்கொள்ள அரசு குறைந்தபட்ச கடனாக நிதியுதவி அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய வழக்கம் இதுவரையில் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் கடனாக தருவதற்கு என்ற வகையிலே ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அதை வேண்டுமானால் வருங்காலத்தில் அரசு பரிசீலனை செய்யலாம்.

* குறுகிய கால வினா எண் 1 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் ஒன்றியத்திற்கு நொய்யல் ஆற்றுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1983 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) ஆம்.

(ஆ) ஒரத்துப்பாளையம் அணைத் திட்டம் மற்றும் கரூர் தாலூக்கா ஆத்துப்பாளையம் பிரதான கால்வாயை 32.75 கிலோ மீட்டர் முதல் 60,00 கிலோ மீட்டர் முடிய நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 877 இலட்சம் செலவிலான மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பின் மீது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையாளர் ஆகியோரது கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் திட்டம் என்பது கால் நூற்றாண்டு காலமாக அந்த பகுதி மக்களால் கோரப்பட்டு வந்த திட்டம். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு இந்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது; ஒன்பது ஆயிரம் ஏக்கர் மட்டும் பாசன வசதி அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிற இந்தத் திட்டத்தை கரூர் ஒன்றியத்திற்கு நீட்டிப்பதற்கு அரசு பரிசிலனை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் எத்தனை ஆயிரம் ஏக்கர்கள் இந்த விரிவாக்கம் திட்டத்தில் சேர்க்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நூற்றாண்டுக் காலமாக ஒரு பெரிய கோரிக்கையாக இருந்த இந்தத் திட்டத்தை 713 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கனவே ஒரு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 25-5-81-ம் தேதியிலிருந்து ஒரு பணி துவங்கி இந்த அணைக்கட்டு வேலை நடந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் திரும்பவும் கரூர் வட்டத்தில் கூடுதலாக சில நிலங்களுக்கு பாசன வசதி வேண்டுமென்றும் இந்தக் கால்வாயை நீட்டிக்க வேண்டுமென்றும் அரசை கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தத் திட்டத்தின் ஆய்வு வேலை நடந்து இறுதி நிலைக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி இந்தப் புதிய திட்டத்தின் காரணமாக 10 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கிற வகையில் இந்தப் புதிய திட்டத்தை ஆய்வு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]